# மக்களின் எதிர்பார்ப்பு

14 செப்டம்பர் 2023

மலேசிய குடிமகனாக திகழ்வதில் நான் பெருமையும் நன்றியும் கொள்கிறேன்.

சென்ற ஆண்டில், நான் டாமான்சாராவில் உள்ள புதிய வீட்டிற்கு மாறி சென்றேன். முன்பெல்லாம் பணக்காரர்கள் மட்டுமே டாமான்சாராவில் வாழ முடியுமாம் ஏனெனில் அவ்வீடுகள் சொகுசாகவும் விலை மில்லியனைத் தொடுபவையாக இருந்ததாக அம்மா சொல்லியிருக்கிறார். இறைவன் சித்தம், அரசு பெரிய அளவில் அனைவரும் வாங்கும் திறன் கொண்ட வீடமைப்பு திட்டங்களை அமல்படுத்தியதும், என்னை போன்ற இளைஞர்களும் அங்கு வீடு வாங்க முடிந்தது.

நான் பெட்டாலிங் ஜெயாவில் ஒரு வடிவமைப்பு பொறியியல் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். என் முதலாளியும் இளைஞர்தான், அவர் அமெரிக்காவில் ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் பணிப்புரிந்துள்ளார். நாங்கள் தற்போது மின்னியல் தளவாடங்களில் பயன்படுத்தப்படும் அறிவார்ந்த கணினி சில்லு வடிவமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளோம். இந்த வடிவமைப்பை சீனாவில் உள்ள தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு உலக சந்தைக்காக உற்பத்தி செய்யப்படும்.

எங்களின் குடும்ப வாழ்வு வசதியாகவே உள்ளது. என் மனைவி ஒரு அனைத்துலக நிறுவனத்தில் கணக்கராக பணிபுரிகிறார். அவர் வீட்டிலிருந்தே பணிபுரிகிறார். உலகிலேயே மிக சிறந்ததாக கருதப்படும் அகலப்பட்டை பெறுவழியால் நிறைய வேலை செய்யும் தாய்மார்கள் வீட்டிலிருந்தே வேலை செய்வதோடு பிள்ளைகளோடு தரமான நேரத்தை செலவிட்டு வருகின்றனர்.

எங்களைப் போன்ற இளைய குடும்பங்கள் யாவுமே நாட்டின் பொருளாதார வாய்ப்பைக் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர். அன்றாட செலவைவிட கூடுதலான வருமானமும், எங்கள் இருவரின் வருமானத்தில் 30% நீண்ட கால முதலீட்டிற்கு சேமித்து வருகிறோம். ஒவ்வொரு வருடமும் விடுமுறைக்குச் செல்ல முடிவதோடு எங்களின் இரு சிறு பிள்ளைகளுக்கும் இணையுதவி நிதி திட்டத்தில் அவர்களின் வருங்காலத்திற்காக சேமித்து வைக்கிறோம்.

மலேசியா தெற்காசிய பகுதியிலும் உலகம் முழுவதும் மதிக்கப்படும் நாடாகும். தெற்காசியாவின் தலைநகராக கருதப்படும் கோலாலும்பூர், உலகின் மிக சிறந்த 5 நகரங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. உலகிலேயே நகரத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் பல்லின கலாச்சாரத்தையும் சுபிட்சமான வாழ்வையும் கொண்டிருக்கும் ஒரே நகராகவும் கருதப்படுகிறது. உலக இஸ்லாம் நடுவண் வங்கியின் தலைமையகமும் 2019-ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் திறக்கப்பட்ட உலகின் சிறந்த 5 நிதி மையங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

கிழக்கு நாடுகள் முதல் மேற்கு நாடுகள் வரை பொறாமை கொள்ளும் மலேசியாவைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். நம் நாட்டில் ஜொகூர் முதல் பெர்லிஸ் வரை, கோலாலம்பூர் முதல் கிளாந்தான் வரை நாட்டின் அத்தனை பெரிய பட்டணங்களும் பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவு ரயில் வண்டி இணைக்கிறது. ஆட்சி நடவடிக்கைகளும் அரசு துறைகளும் நாடு முழுமைக்கும் பிரிக்கப்பட்டதோடு சிறந்த போக்குவரத்து இணைப்பைக் கொண்டிருப்பதாலும் மக்களின் பணிகளும் எளிமையாக முடிகின்றன.

தெற்காசியாவிலேயே மலேசிய மக்கள்தான் பெரிய பணக்காரர்கள். RM4,000-க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களே மலேசியாவில் இல்லை. குடியேற்றக்காரர்கள் என அழைக்கப்பட்ட நில உரிமையாளர்கள் தற்போது விவசாய கோடீஸ்வரர்கள் மற்றும் சிறிய தொழிற்துறையைச் சார்ந்தவர்களும் தங்களுடைய நிலத்தில் பாடுபட்டு வெற்றி பெற்று வருகின்றனர்.

பல்வேறு விதமான இனங்கள் வாழ்ந்தாலும் மலேசியாவின் சுபிட்சத்தை மற்ற நாடுகள் பெருமையுடன் காண்கின்றனர். பல்வேறு இன மக்களின் ஒற்றுமையால் விளைந்த இந்த சுபிட்சத்திற்கு தெற்காசியாவிலேயே மிக சிறந்த தற்காப்பு திறனைக் கொண்டிருப்பதாக அங்கீகரிக்கப்பட்ட மலேசிய ராணுவமும் ஒரு காரணமாகும்.

முக்கியமாக, இவ்வட்டாரத்திலேயே நாட்டின் வளத்தை முறையாக நிர்வகித்தால் சுபிட்சமாக வாழும் மக்களை உருவாக்கும் என்பதை மலேசியா நிரூபித்திருப்பதைக் கண்டு நான் பெருமை படுகிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட மரபுவழி நிதி எண்ணெய் மற்றும் எரிபொருள் வருமானம் வழி சேமிக்கப்பட்டு இப்போது 12,400 கோடி ரிங்கிட்டை நெருங்கிவிட்டது. மக்கள் பல்கலைக்கழகம் வரை இலவச கல்வியைப் வழங்குவதோடு, இலவச சுகாதார சேவையும் வழங்கப்படுகிறது. இவ்வட்டாரத்திலேயே மலேசியா மட்டும்தான் மனைவிக்கும் தேசிய சமூகநல பாதுகாப்பு அமைப்பின் கீழ் சேமிப்பு திட்டத்தையும் வழங்குகிறது.

நான் வேறு நாடுகளுக்கு வேலை நிமித்தமாக செல்லும்போது, நம் நாட்டை பரிவுடன் நோக்கப்படுவதை எண்ணி பெருமைப்படுவேன். அவர்கள் நம்முடைய முழுமையான மக்களாட்சியை நடைமுறைப்படுத்தும் பாங்கை கண்டு ஆச்சரியப்படுகின்றனர். நாட்டின் நீதிதுறை அமைப்பு உலகால் மேற்கோள் காட்டப்பட்டு வருகிறது. அதோடு, நமது பொருளாதார நடவடிக்கைகளை மக்களை மையப்படுத்துவதாகவும் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையின் முன்மாதிரி வெற்றியையும் மற்ற நாடுகள் பரிசீலித்து வருகின்றன.

பத்துவருடங்களுக்கு முன் நடந்த 2013 தேர்தலில் சரியான முடிவெடுக்கப்பட்டதால் இன்று மலேசியா சரியான பாதையில் பயணிப்பதைக் கண்டு உவகைக் கொள்கிறேன். அதுதான் நான் வாக்களித்த முதல் பொதுதேர்தல், மற்றும் ஒவ்வொரு முறையும் மலேசியாவின் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையோடு பார்க்கும்போது, நாட்டை சரியான பாதைக்கு அவ்வருடம் மாற்றிய தலைமுறையின் பகுதியென நினைத்து பெருமை கொள்கிறேன்.

முகமட் அட்லான் பின் அஸ்ருல்
டாமான்சாரா



# மக்கள் தேர்தல் அறிக்கை
# பக்காத்தானே மக்களின் நம்பிக்கை

## மக்கள் நல்வாழ்வு

- எண்ணெய் விலை குறைப்பு
- மின் கட்டணம் குறைப்பு
- தண்ணீர் கட்டணக் குறைப்பு
- டோல் கட்டணத்தை அகற்றுவது
- ஆதிக்கப் போக்கை அகற்றுவது
- வாகன விலையைக் குறைப்பது
- 150,000 வாங்கும் சக்திகேற்ற வீடுகள் கட்டுதல்
- முதல் வருடத்தில் வாங்கும் தகுதிகேற்ற விலை கொண்ட வீடுகளை கட்ட முதலாவது ஆண்டில் 500 கோடி ரிங்கிட்டையும் இரண்டாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரை ஆண்டுக்கு 200 கோடி ரிங்கிட்டையும் ஒதுக்குதல்.
- அனைவருக்கும் இலவச கல்வி, PTPTN அகற்றுதல்
- AES அகற்றப்படும், AES சம்மன் ரத்து செய்யப்படும்
- பெல்டா குடியேற்றவாசிகளுக்கு நீதி
- மக்களுக்கு எதிரான கொடுமையான சட்டங்களை அகற்றி நீதியை நிலைநாட்டுதல்
- அரசு மருத்துவமனையில் அனைத்து மக்களுக்-கும் இலவச மருத்துவம் வழங்குவதோடு 2&3-ஆம் வகுப்பு கட்டணம் அகற்றுதல்.
- சமூக நலத்துறை வழி வழங்கப்படும் சமூக நலத்துறை உதவிகள் மாதத்திற்கு 300 ரிங்கிட்டி-லிருந்து 550 ரிங்கிட்டாக உயர்த்துதல்.

## மக்கள் சகோதரத்துவம்

- சமயங்கள் மற்றும் இஸ்லாம் அமைப்பின் மறுமலர்ச்சி
- கலாச்சாரமே தேசிய ஒற்றுமைக்கு அடித்தளம்
- தேசிய மகளிர் சேமநிதி: கணவன்மார்கள் தங்களின் சம்பள விகிதாசாரத்திற்கேற்ப (மாதம் RM10 முதல் RM100 வரை) குறிப்பிட்ட தொகையை இந்த சேமநிதியில் சேர்ப்பது சட்டப்படி கட்டாயமாக்கப்படும்.
- மூத்த குடிமக்களுக்கு உதவி: 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் ஆண்டுக்கு 1,000 வெள்ளி போனசாக வழங்கப்படும்.
- தேசிய மொழியின் மேன்மை கட்டிக்காக்கப்பட்டு, தாய்மொழியின் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு ஆங்கில மொழியின் தரம் மேம்படுத்தப்படும்.
- நாடு முழுவதும் மக்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு (தற்போது வழங்கப்படும் நிர்வாகச் செலவினத்திற்கான மானியம் தவிர்த்து) கூடுதல் ஒதுக்கீடு வழங்கப்படும். இதற்காக 22 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படும்.
- கூட்டரசில் சபா-சரவாவுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்துக்கு மதிப்பளித்தல்

  கூச்சிங் பிரகடனத்தின் அம்சங்களுக்கேற்ப சபா-சரவா மக்களுக்கு திட்டங்கள் உடனடியாக அமல்படுத்தப்படும்.
- பூர்வக் குடியினரின் நில உரிமை-சமூக நலன் பாதுகாக்கப்படும்

## மக்கள் பொருளாதாரம்

- ஐந்து ஆண்டுகளில் பத்து லட்சம் அந்நியத் தொழிலாளர்களைக் கட்டங்கட்டமாக குறைப்பதன் மூலம் 10 லட்சம் புதிய வேலை வாய்ப்புகளை மலேசியர்களுக்கு உருவாக்குதல்
- குறைந்த பட்ச சம்பளத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரி.ம. 1,100ஐ சம்பளமாகப் பெறுவர்.
- மேற்கல்வி பெறாத 10 லட்சம் இளையோருக்கு மக்கள் முன்னோடித் திட்டத்தின் வாயிலாக டிப்ளோமா வரைக்குமான தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.
- கைத்தொழில் மற்றும் தொழில்திறன் பயிற்சிகளுக்கு 5 பல்கலைக்கழகங்கள், நடப்பு பொருளாதார தேவைக்கேற்ப 25 தொழில்திறன் பள்ளிகள் நிர்மாணித்தல்
- கல்வி மறுசீரமைப்பின் வழி பொருளாதார மேம்பாடு
- தொழிற்சங்கம்-முதலாளிமார்கள்-அரசாங்கம் இடையிலான விவேக பங்காளித்துவத்தை கலாச்சாரமாக்குவது
- IKS உதவித் தொகை மற்றும் ஊக்குவிப்பு மறுசீரமைப்பு
- 26 விழுக்காடு வரி செலுத்த வேண்டிய வருமான இலக்கான 250,000ஐ கூடுதலான வருமானத் தொகை ரி.ம. 400,000 ஆக உயர்த்தப்படும்.
- மக்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பெங்கேராங்-கிலுள்ள அனைத்து ரெப்பிட் திட்டங்களும் மறுஆய்வு செய்யும்.
- இராணுவ வீரர்களின் பொருளாதாரம்- சமூக நலனைப் பாதுகாத்தல்
- டாக்சி தொழில்முனைவோரை வலுப்படுத்துதல்
- ஆராய்ச்சி & மேம்பாட்டிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% முதலீடு
- மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பொது போக்குவரத்து வசதி, கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதியில் பஸ்களின் எண்ணிக்கையும் பயணத் தடங்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாக ஆகும் வகையில் ஆட்சிக்கு வந்த முதலாம் ஆண்டில் 200 கோடி ரிங்கிட் ஒதுக்கப்படும்.
- ஆதிக்கப்போக்கைத் தகர்த்தெறிந்து போட்டித் தன்மையை அதிகரிப்பதில் பக்காத்தான் ரக்யாட்டின் பொருளாதார அணுகுமுறை கவனம் செலுத்தும். இதன் வழி விலைவாசியைக் குறைத்து பொருளாதாரத்தின் ஆக்கத்திறனை வலுப்படுத்த முடியும்.மேலும் பல புதிய தொழில்முனைவோரின் உருவாக்கத்திற்கு இது வழி வகுக்கும்.

## மக்கள் அரசாங்கம்

- இஸ்லாம் அல்லாத சமயங்கள் மற்றும் இஸ்லாம் அமைப்பின் மறுமலர்ச்சி
- அரசுப் பணியாளர்களுக்கான புதிய சம்பள மற்றும் சேவைத்திட்டம்
- தூய்மையான, நீதியான, வெளிப்படையானத் தேர்தல்
- நீதித்துறை, சட்டத்துறைத் தலைவர் அலுவலகம், SPRM மற்றும் PDRM ஆகியவற்றில் மறுசீரமைப்பு
- நாடாளுமன்ற மறுமலர்ச்சி
- ஊடக சுதந்திரமும் ஊடகவியலாளர்களின் நம்பிக்கையை மீட்டு கொடுத்தல்
- AUKU-வை அகற்றுவதோடு கல்வி சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துதல்
- மக்களுக்கு எதிரான அனைத்து கொடூர சட்டங்களும் அகற்றப்படும்
- நாட்டில் ஊழலை வேரறுக்கும் கொள்கை (DEBARAN) அமல்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த ஆக்ககரமான அணுகுமுறையோடு லஞ்சத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.